**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழ - 2020**

**---------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**---------------------**

### 1.1 அபிப்பிராயம்

**----------------**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைகழகத்தின் நிதிக்கூற்றுக்களினுள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

**----------------------------------------------**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

**------------------------------------------------------------------------------------------------------**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான

நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு வவுச்சர், கொடுப்பனவு வவுச்சர் முதலிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணுதல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 பெற வெண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தொகை ரூபா 7,053,294 ஆன பெற வேண்டிய 11 மீதிகளுக்காக 01 ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருப்பினும் அம் மீதிகள் அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம் மீதிகள் இடையில் வைப்பு செய்தல் ரூபா 2 மில்லியன் காணப்படுகின்றதுடன் தொடர்புடைய சேவை இன்னுமாக பெற்றுக் கொள்ளப்படுகின்றமையினால் அறவிடப்பட முடியாதுள்ளது. ஏனைய மீதிகள் அறவிடப்படல் மற்றும் தீர்க்கப்படல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் 2021 கணக்காண்டிற்காக இணக்கம் செய்யப்படும். | பெற வேண்டிய மீதி விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்ற கல்விசார் பதவியணியில் 34 நபர்கள் மற்றும் கல்விசார்பற்ற பதவியணியில் இருவர் மீண்டும் கடமைக்கு சமூகமளிகாகத காரணத்தினால் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் ரூபா 19,705,186 பிணைப்பு மீறிய அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் ரூபா 17,548,926.93 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 15 உத்தியோகத்தர்களுக்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 12 உத்தியோகத்தர்களுக்காக ஆரம்ப பரிசோதனை மேற்கொள்வதற்கும் 7 உத்தியோகத்தர்களின் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை | | | |
| (i) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) மீளாய்வாண்டினுள் காசோலை ஊடாக மற்றும் பணமாக வெளியிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,069,879 ஆன 06 முற்பணம் மற்றும் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 83,027 ஆன 3 முற்பணம் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு குறிக்கப்பட்டிருந்த பட்டமளிப்பு விழாவிற்காகவும், வர்ண வழங்கல் விழாவிற்காகவும் அரங்குகள் முன்பதிவு செய்வதற்காக முற்பணம் வழங்கப்பட்டதுடன் நாட்டில் காணப்பட்ட COVID நிலை காரணமாக அவ் விழாக்கள் நடத்துவதற்கு முடியாது போனது. அதனால் அத் தொகை வைப்பாக நிறுவனத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், "The Economist" இதழிற்காக 2020.12.31 இற்கு முன்னர் தீர்ப்பதற்கு முடியாது போனது நாட்டில் காணப்பட்ட COVID நிலையின் அடிப்படையில் சிங்கப்பூரிலிருந்து அவ் இதழ் கொண்டு வரப்படுவதற்கு முடியாமையின் அடிப்படையில் தொடர்புடைய விலைப்பட்டியல் அந் நிறுவனத்திலிருந்து பெறப்படாமையினாலாகும். | இடைகால கட்டுநிதி மற்றும் முற்பணம் தொடர்பாக நிதி பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (ii) தற்காலிக இடைக்கால் கட்டுநிதி உயர்ந்தபட்ச எல்லையான ரூபா 100,000 விஞ்சி 02 உத்தியோகத்தர்களுக்கு 13 சந்தர்ப்பங்களின் போது கூட்டுத்தொகை ரூபா 1,561,800 பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டு சபை மற்றும் கூட்டங்களுக்காக பங்குபெறும் அங்கத்தவர்களுக்கு அங்கத்தவ கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு பெற்றுக் கொடுப்பதற்காக துணை வேந்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு ரூபா 100,000.00 விஞ்சிய முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 571 (2) | 2016,2017, 2018 ஆகிய ஆண்டுகளில் பெறப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,486,675 ஆன மீண்டும் செலுத்தப்பட வேண்டிய 107 டென்டர் வைப்புக்கள் தீர்க்கப்படுவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவ் வைப்பாளர்களுக்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்தப்பட்டிருப்பினும் அவர்கள் அந்த பணத்தினை மீண்டும் கோராது அடுத்த டென்டர் தடவைக்காக தொடர்ச்சியாக வைக்கப்படுவதுடன் அவர்களின் காலம் முடிவறுத்தப்பட்ட பின்னர் அவ் டென்டர் வைப்பு மீண்டும் கொடுப்பனவு செய்யப்படும். அவர்கள் அந்த பணத்தினை மீண்டும் கோரப்படாதவிடத்து எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி தாபன விதிக் கோவை ----------------- XX அதிகாரத்தின் 3.1 ஆம் உறுப்புரை | கல்விசார் ஊழியர்களின் வருகை, வெளியேரல் மற்றும் விடுமுறை தொடர்பாக பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. வருகை வெளியேறல் உறுதி செய்யப்படுவதற்காக முறைமையொன்று தயாரிக்கப்பட | இது பல்கலைக்கழக முறைமைக்கே தாக்கமளிக்கும் விடயமாகியமையினால் இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் | பல்கலைக்கழக தாபனக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான கூட்டக் குழுவின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| வேண்டுமென பொது முயற்சிகள் தொடர்பான கூட்டக் குழுவில் ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆனைக்குழுவினால் ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். இவ் விடயம் முன்னைய ஆண்டுகளில் பொது முயற்சிகள் தொடர்பாக கூட்டக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. | வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவு**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 146,550,951 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 871,320,870 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 724,769,919 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இவ் முன்னேற்றத்திற்கு உள்ளக வருமானம் குறைதல், தனிப்பட்ட சம்பளம், தேய்மானம் மற்றும் அசையா சொத்துக்களின் காலக்கழிவு அதிகரித்தல் பிரதான காரணங்களாகக் காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018, 2019 ஆண்டுகளில் வெளியக பரீட்சை கற்கைநெறி கட்டணம் மற்றும் கருத்தரங்குகளுக்காக மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 172,295,076 தொடர்புடைய கற்கைநெறி மற்றும் கருத்தரங்கு நடத்தப்படாமையின் காரணத்தினால் தாமதமான வருமானம் என காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த கற்கைநெறிக்கான செலவினம் வருகிற ஆண்டுகளில் ஏற்பதற்கு நேர்ந்தமையினால் கற்கைநெறியின் வரும் ஆண்டுகளுக்கான பெறுவனவு கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் தாமதமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த கால எல்லைக்குள் கற்கைநெறி மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) முறையான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டம் மேற்கொண்டு செல்லும் திறன் குறிக்கப்படாது அவையரங்கம் நிர்மாணிப்பதற்கு தொடர்புடைய பணிக்காக ஆலோசனைக் கட்டணம் மற்றும் திட்டமிடலுக்காக 2016 யூன் 22 திகதி முதல் ரூபா 5,794,676 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரை அப் பணி நிறைவேற்றப்படாமை காரணத்தினால் ஏற்கப்பட்ட | கணக்கில் காணப்படுகின்ற ரூபா 5,794,676 ஆன செலவொன்று காணப்படுவது ஆலோசனை சேவை நிறுவனத்தினால் திட்டம் முன்வைக்கப்படுவதற்கானதுடன் அது பல்கலைக்கழகத்திற்கு பெறப்பட்டுள்ளது. நிதியேற்பாடு இல்லாமையினால் ஒப்பந்தம் வழங்கலொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் புதிய செயற்திட்டமொன்றாக பொது திறைச்சேரியினூடாக | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் குறைந்த கிரயத்துடன் செயற்திட்டம் நிறைவேற்றல் குறித்து முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினம் சிக்கனமற்ற செலவினமாக காணப்பட்டது. | நிதியேற்பாடு கோரப்பட்டுள்ளது. | |
| (இ) | மருத்துவ பீடத்திற்காக மெத் செவன காணியில் 6.5 ஹேக்கர் கையகப்படுத்துவதற்காக 1994 யூன் 29 ஆம் திகதி எடுக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 1998 ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களின் போது 24 மில்லியனும், 2019 ஆம் ஆண்டில் 50 மில்லியனுமாக ரூபா 74 மில்லியன் மேல் மாகாண சபைக்கு செலுத்தப்பட்டிருப்பினும், தொடர்புடைய காணி கையகப்படுத்தும் பணி மீளாய்வாண்டில் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது வரையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருப்பது கையகப்படுத்தப்பட்ட பகுதிக்காகும். எஞ்சிய காணி அளவு பெற்றுக் கொள்வதற்காக தொடர்சியாக கூட்டங்கள் நடத்தப்படுகின்றதுடன் விரைவாக பல்கலைகழகத்திற்கு பெற்றுக் கொள்ளல் பல்கலைக்கழகத்தின் அபிப்பிராயமாகும். | காணி கையகப்படுத்தல் நடவடிக்கைகள் விரைவுப்படுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதி வரையிலான 06 ஆண்டுகள் கால எல்லைக்குள் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்காக வெவ்வேறு ஆராய்ச்சிகளுக்காக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 669 மில்லியனிற்காக ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதில் அகற்றப்படல் மற்றும் பணம் பெற்றுக் கொள்ளாமையின் அடிப்படையில் 31 ஆராய்ச்சிகள் நிறுத்தப்பட்டதுடன் 173 ஆராய்ச்சிகள் மீளாய்வாண்டு இறுதியிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டினுள் 14.89 மில்லியன் நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த 31 விரிவுரையாளர்கள் அறிக்கை திகதி வரையில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த காரணத்தினால் வேறு விரிவுரையாளருக்கு அதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி சபையினால் தொடர்ச்சியாக ஆராய்ச்சி தொடர்பாக மீளாய்வு செய்யப்படுவதுடன் இந்த அறிக்கைக்கு தொடர்புடைய தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டதன் பின்னர் 12 ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக அறிக்கைகளளவிற்காக நாட்கள் நீடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆராய்ச்சி அளிப்பு பயன்படுத்தப்பட்டு தொடர்புடைய கால எல்லைக்குள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் பரிசில்கள் மற்றும் புலமைபரிசில் நிதிகள் 102 இன் கீழ் காணப்பட்ட ரூபா 35,527,763 இல், 98 நிதிகளின் கீழான ரூபா 32,839,003 தொடர்புடைய குறிகோளுக்காக பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டது. | புலமைபரிசில் மற்றும் பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது விசேட குறிக்கோள் அல்லது நோக்கத்திற்காகவாகும். தொடர்புடைய குறிக்கோள் மற்றும் அளவீடுகள் அடையப்படுவதற்கு முடிந்தால் மட்டும் பயன்படுத்தப்படும். இந்த ஆண்டினுள் பட்டமளிப்பு விழா நடத்தப்படாமையின் அடிப்படையிலும் இந்த நிதி குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. நிதியத்தின் வருமானம் மட்டும் செலவிடப்படுகின்றதுடன் முதலீட்டு பணம் வருங்காலத்திற்கு பாராமரிக்கப்படும். | பரிசில் மற்றும் புலமைபரிசில் நிதியம் நிறுவப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்படுவதற்காக தொடர்புடைய பணம் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு இறுதியில் மீதி ரூபா 36,658,732 ஆன ஆராய்சி நிதியக் கணக்குகள் 28, 05 ஆண்டுகளுக்கு அதிகமான காலத்திலிருந்து பயன்படுத்தப்படிராததுடன் கூட்டுத்தொகை ரூபா 22,503,744 ஆன நிதிய கணக்குகள் 47, மற்றும் கூட்டுத்தொகை ரூபா 347,586,262 ஆன விசேட நிதியங்கள் 28 மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெவ்வேறு நிறுவனங்களடமிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அளிப்புகள் தொடர்புடைய பணிகளுக்காக மட்டும் பயன்படுத்தப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டினுள் நிதிய குறை பயன்பாட்டிற்கு கொவிட் - 19 தாக்கமளித்திருந்தது. விசேட நிதி ஒவ்வொரு திணைக்களத்தினால் உருவாக்கப்படுகின்ற வருமானமாவதுடன் அவ் வருமானம் நிதியம் நிறுப்பட்ட குறிக்கோளின் பிரகாரம் பயன்படுத்தப்படும். 2020 ஆம் ஆண்டில் கொவிட் - 19 தாக்கத்தின் பிரகாரம் குறைப்பயன்பாடு காணப்பட்டது. | ஆராய்ச்சி நிதியம் நிறுவப்பட்ட குறிக்கேள்கள் நிறைவேற்றுவதற்காக பணம் பயன்படுத்தப்படல் வேண்டும். |